# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016

| தரம் : 11 | கிறிஸ்தவம் (NRC) | நேரம் : 3.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ................................................. | |

பகுதி I

✡ **கவனிக்க.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை ( × ) இடுக.**
- **அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.**

01. "இமானுவேல்" என்பதன் பொருள்
1. "கடவுள் நம்முடன் இருக்கிறார்" 2. "கடவுள் அன்புள்ளவர்"
3. அருட்பொழிவு பெற்றவர் 4. அபிஷேகம் பண்ணப்பட்டவர்

02. யாருடைய சந்ததி இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டது?
1. ரூபன் சந்ததி 2. யோசேப்பின் சந்ததி
3. யாக்கோபின் சந்ததி 4. பெஞ்சமின் சந்ததி

03. "இதோ நான் என் தூதனை அனுப்புகின்றேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்" என்ற கூற்று யாரைக் குறித்துக் கூறப்பட்டது.
1. இயேசு 2. திருமுழுக்கு யோவான் 3. மோசே 4. ஆரோன்

04. இயேசு தனது பணியைக் குறித்த முன் அறிவிப்பினை வெளிப்படுத்திய இடம்
1. சோதனைகளின் போது 2. திருமுழுக்கின் போது
3. தோற்றம் மாறுதலின் போது 4. நாசரேத் தொழுகைக் கூடத்தில்

05. மக்களை மனம் திரும்பர் செய்யும் பணியில் தனது குமாரன் ஈடுபடுவார் எனக் கூறியவர் யார்?
1. யோசேப்பு 2. செக்கரியா 3. மரியாள் 4. எலிசபெத்

06. கடவுள் ஆபிரகாமுடனும் அவரின் வழிமரபினருடனும் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக செய்துகொள்ளப்படும் சம்பிரதாயம்.
1. விருத்தசேதனம் 2. அர்ப்பணிப்பு 3. திருமுழுக்கு 4. திருவிருந்து

07. பாலன் இயேசுவை எருசலேம் கோவிலில் மெசியாவாக இனங்கண்டு கொண்டவர்
1. செக்கரியா 2. ஏரோது 3. சிமியோன் 4. எலிசபெத்

08. யூத சமூகத்தில் எத்தனை வயதை அடைந்த ஆண் பிள்ளைகள் வளர்ந்தோராகக் கருதப்பட்டனர்.
1. 30 2. 65 3. 18 4. 12

09. "ஐயா இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்" என்று இயேசுவைப் பார்த்துக் கூறிய சீடன் யார்?
1. பேதுரு 2. யோவான் 3. யூதாஸ் காரியோத்து 4. பிலிப்பு

10. தன் தாயும் சகோதரரும் யாரென இயேசு கூறினார்?
   1. இறைவார்த்தையைக் கேட்பவர்
   2. இறைவார்த்தையின் படி நடப்பவர்
   3. இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயற்படுபவர்
   4. இரத்த உறவுக்கு உட்பட்டவர்

11. "நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்?
   1. மரியாள் 2. மகதலா மரியாள் 3. சமாரியப் பெண் 4. மார்த்தாள்

12. இனமத பேதமின்றி அனைவரையும் நேசிக்க வேண்டும் என்ற கருத்தை விளக்க இயேசு கூறிய உவமை
   1. கடுகு விதை 2. நல்ல சமாரியன்
   3. மன்னிக்க மறுத்த பணியாளர் 4. காணாமற் போன ஆடு

13. "தோரா" என்னும் மோசேயின் நீதிச்சட்ட நூல்களுக்குள் அடங்காத நூல்
   1. தொடக்க நூல் 2. எண்ணிக்கை 3. விடுதலைப் பயணம் 4. திருப்பாடல்

14. தலைமைக் குருக்கள் பதவி எந்தக் குழுவினரிடமிருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.
   1. சதுசேயர் 2. பரிசேயர் 3. செலோத்தேயர் 4. ஏரோதியர்

15. சதுசேயரால் இயேசுவிடம் கேட்கப்படாத வினா
   1. அதிகாரம் பற்றிய வினா 2. உயிர்த்தெழுதல் பற்றிய வினா
   3. உபவாசம் இருத்தல் பற்றிய வினா 4. அரசருக்கு வரி செலுத்துதல் பற்றிய வினா

16. இயேசு எருசலேமுக்கு கழுதையில் பவனி சென்றார். கழுதை எதன் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது?
   1. வீரத்தின் 2. தாழ்மையின் 3. வெற்றியின் 4. விவேகத்தின்

17. இந்தக் கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை இயேசு இதனைக் கூறிய சந்தர்ப்பம் எது?
   1. பெரிய வியாழன் 2. குருதித்தோலைத் திருநாள்
   3. பெரிய வெள்ளி 4. உயிர்த்த ஞாயிறு

18. கெத்சமெனே செபத்தின் மையப்பொருள்
   1. வேண்டுதல்களை ஏறெடுத்தல்
   2. என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்
   3. சுகமளிக்கும் வேண்டுதல்
   4. உணவு தரும்படியான வேண்டுதல்.

19. பிலாத்துவின் முன் இயேசுவைக் குறித்து கூறப்பட்ட குற்றங்கள் யாவை?
   A - மக்களைக் தூண்டுபவர்
   B - பேரரசுக்கு வரி செலுத்துவதைத் தடுப்பவர்
   C - தன்னைக் கிறிஸ்து என்னும் அரசர் எனக் கூறுதல்
   D - மீட்பு இறைவனின் கொடை எனக் கூறினார்
   1. A யும் B யும் 2. B யும் C யும்
   3. A யும் B யும் C யும் 4. A யும் B யும் D யும்

20. இயேசு விசாரணைக்காக பிலாத்து, ஏரோது ஆகியவர்களிடம் கொண்டு செல்லப்பட்டார். ஏரோது அவரிடம் கூற்று 1 பல வினாக்களைக் கேட்டார். காரணம் இயேசுவின் அதிகாரத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இவற்றுள்
   1. கூற்று சரி காரணம் பிழை 2. காரணம் சரி கூற்றுப் பிழை
   3. கூற்றும் பிழை காரணமும் பிழை 4. கூற்றும் சரி, காரணமும் சரி

21. எம்மா ஊருக்குச் சென்ற சீடர்கள் இயேசுவை அறிந்து கொண்ட விதம்
1. அவரது பேச்சுத்திறனைப் பார்த்து
2. அவரது தொனியின் மூலம்
3. அப்பத்தைப் பிட்டுக் கொடுத்த முறையைப் பார்த்து
4. அவர் ஜெபித்த முறையைக் கொண்டு

22. இறையரசின் வளர்ச்சியைக் குறிக்கும் உவமைகள்
A - கடுகு விதை B - அத்திமரம்
C - நல்ல சமாரியன் D - புளித்த மா
1. A யும் B யும் 2. A யும் D யும் 3. A யும் C யும் 4. A, B, C

23. இறைவார்த்தையைக் கேட்டு ஒவ்வொருவரும் காட்டும் பிரதிநடத்தையைக் காட்டும் உவமை
1. விதைப்பவன் உவமை 2. கடுகு விதை உவமை
3. மனம் திருந்திய மகன் 4. தாலந்துகளின் உவமை

24. திருமண விருந்து என்ற உவமையில் வெளிக்கொண்டு வரப்படும் கொள்கைகள்
A - இறையரசு எல்லாருக்கும் திறந்திருக்கும்
B - கடவுளுடைய தீர்மானத்திற்கு ஏற்ப இறையரசு முழுமை அடையும்
C - கடவுளால் மட்டுமே தேவ இராச்சியத்திற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது.
D - சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவர்களை நேசித்தல்
1. ACD 2. BCD 3. ABC 4. DCB

25. “இப்பொழுது சிரித்து இன்புறு வோரே. ஐயோ உங்களுக்கு கேடு ஏனெனில்.......................
1. பட்டினி கிடப்பீர்கள் 2. துயருற்று அழுவீர்கள்
3. சிரித்து மகிழுவீர்கள் 4. நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்

26. ஆபிரகாம் என்பதன் பொருள் யாது?
1. அழைக்கப்பட்டவர் 2. இனத்தின் தந்தை
3. விசுவாசத்தின் தந்தை 4. அஞ்ஞானி

27. நல்லாயன் பற்றிக் குறிப்பிடும் நற்செய்தி நூல் எது?
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

28. கொரிந்தியர் திருமுகத்தில் பவுல் குறிப்பிடும் அன்பின் பண்புகளுள் ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1. பொறுமையுள்ளது 2. பொறாமைப்படாது
3. தன்னலம் நாடாது 4. மேற்கூறிய யாவும் சரி

a. 1920 மே மாதம் 18 ஆம் நாளன்று பிறந்தவர்
b. துருக்கி இன அலி அக்கார் என்பவரால் தாக்கப்பட்டவர்
c. மெதடிஸ்த திரு அவையைச் சேர்ந்தவர்

29. மேலுள்ள கூற்றுக்களுள் இரண்டாம் ஜுவாம் பவுல் தொடர்பானவை
1. a யும் b யும் 2. a யும் c யும் 3. b யும் c யும் 4. abc மூன்றும்

30. திருத்தொண்டர்களுள் ஒருவர்
1. பிலமோன் 2. நிக்கதேம் 3. பிலப்பு 4. சகரியா

31. பவுலின் காலத்தில் உலகெங்கும் பஞ்சம் ஏற்படப் போவதாக முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
1. அகபு 2. எலியா 3. எலிமா 4. பவுல்

32. பவுலின் மூன்றாவது பயணத் தோழர்களுள் அடங்காதவர்
1. தீத்து 2. எலியா 3. தீமோத்தேயு 4. லூக்கா

33. யூதரான இயேசு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கும் போது அவள் புதுமை அடையக் காரணம் யாது?
   1. யூத அண் ஒருவர் சமாரியப் பெண்ணுடன் கதைத்தல்.
   2. மனிதனின் தீய குணங்களை இறைவன் வெறுத்தல்
   3. இறையன்பு என்பது யூதருக்கு மட்டும் உரியது
   4. மேற்கூறிய எதுவுமன்று

34. "நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப்படுத்துவோம்" என பவுல் எத்திருமுகத்தில் எழுதியுள்ளார்.
   1. 1 கொரிந்தியர்   2. ரோமர்   3. 2 கொரிந்தியர்   4. தீத்து

35. கூற்று - ஏழ்மை நிலையை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். காரணம் - உறுதியான கொள்கையை ஏற்படுத்தியும் ஏழ்மை நிலையை மேற்கொள்ளலாம்.
   1. கூற்றும் சரி காரணமும் சரி   2. கூற்று சரி காரணம் பிழை
   3. கூற்றும் காரணமும் பிழை   4. கூற்று பிழை காரணம் சரி

36. இதோ! இஸ்ராயேல் மக்களின் அழுகுரல்..............." இடைவெளியில் வரவேண்டியது.
   1. என்னைச் சேர்ந்துள்ளது   2. என்னைக் கண்டுள்ளது
   3. என்னை எட்டியுள்ளது   4. என்னால் வந்தது

37. "உயிருள்ள யாவற்றுக்கும் தாய்" எனப் பொருள்படும் சொல்
   1. மரியா   2. மார்த்தா   3. ஏனோக்   4. ஏவாள்

| A | B |
|---|---|
| எசாயா | a. எட்டாம் நூற்றாண்டு, சேராபீன்கள் |
| ஆமோஸ் | b. எரபோவாம், சமூக நீதி |
| மீக்கா | c. சமாதான யுகம், இறுதி நாட்கள் |

38. மேலுள்ள தரவுகளின்படி எசாயா இறைவாக்கினருக்குப் பொருத்தமான B பகுதியிலுள்ள தொகுதி
   1. a   2. b   3. c   4. எதுவுமன்று

39. பழைய ஏற்பாட்டில் திராட்சைத் தோட்டமானது எதனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
   1. இஸ்ராயேவரை   2. எகிப்தியரை   3. எபீசினியரை   4. கானானியரை

40. நாம் வாழும் சமூகத்தில் அமைதியைக் கட்டியெழுப்ப நாம் செய்ய வேண்டியது.
   1. நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படல்   2. சமாதானத்தை ஏற்படுத்தல்
   3. ஒத்துழைப்பு வழங்கல்   4. மேற்கூறிய யாவும் சரி

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. a) மெசியா பற்றிய எதிர்பார்ப்பில் எந்த அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும் என இறைவாக்கினர் எசாயா கூறியுள்ளார்?

b) கற்களிலிருந்தும் யாருக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யக் கடவுள் வல்லவர் என லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்?

c) தீய ஆவியால் பிடிக்கப்பட்டு நிமிர முடியாதவளாய் இருந்த பெண் எத்தனை ஆண்டுகளாய் அந்நிலையில் இருந்தார்?

d) "ஆனால், நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்" என இயேசு யாருக்குக் கூறினார்?

e) இறைசித்தத்திற்குப் பிரதிநடத்தை காண்பித்த இரு குடும்பங்களை திருவிவிலியத்திலிருந்து குறிப்பிடுக.

f) மலைப்பொழிவானது திருவிவிலியத்தில் எந்நூலில் எந்தெந்த அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது?

g) யூத பேரரசனால் பெரிய சிறைக்கூடத்தில் சேறு நிரம்பிய பாழுங்கிணற்றில் போடப்பட்ட இறைவாக்கினர் யார்?

h) திருத்தூதர் பணி நூலில் சவுல் முதன்முதலாக "பவுல்" என்ற கிரேக்கப் பெயரில் எந்த இடத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறார்

I) "ரபி நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர்" என இயேசுவிடம் கூறியவர் யார்?

j) கிறிஸ்தவ குடும்பத்தின் கடமைகள் எனப் பவுல் எபேசியர் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இரண்டு எழுதுக?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. அ. இயேசுவின் பன்னிரு சீடர்களுள் நால்வரின் பெயர்களை எழுதுக?

ஆ. இயேசு பன்னிரு சீடர்களைப் பணிக்கு அனுப்பிய போது அவர்களுக்குக் கூறிய அறிவுரைகள் மூன்று எழுதுக?

இ. கிறிஸ்தவ மாணவராகிய நீர் சீடத்துவப் பணியினை மேற்கொள்ளக்கூடிய விதங்கள் மூன்று எழுதுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03. அ. 'மெசியா' என்னும் சொல் எபிரேய மொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?

ஆ. மெசியா என்ற எண்ணக்கருவின் விசேட பண்புகள் மூன்று எழுதுக?

இ. தற்காலத்தில் மெசியா என்ற எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடிய முறைகள் நான்கு எழுதுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04. அ. இயேசுவிற்கு இரு பிரிவுகளால் சவால்கள் ஏற்பட்டன அப்பிரிவினர் யாவர்?

ஆ. இயேசு தனது இறுதி வாழ்நாளிலும் மன்னிப்பு வழங்கினார் என்பதற்கு மூன்று உதாரணங்கள் எழுதுக?

இ. இயேசுவானவரின் வாழ்விலிருந்து நீர் பெறும் முன்மாதிரிகையான பண்புகள் ஐந்து எழுதுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05. அ. சபை என்றால் என்ன?

ஆ. இன்றைய காலத்தில் வாழும் சபைகளின் ஒன்றிணைப்புக்காகச் செயற்படும் நிறுவனங்கள் மூன்று எழுதுக?

இ. திராட்சைச் செடி உவமையினூடாக இன்றைய கால சபைகளுக்குக் கூறப்படும் அறிவுரைகள் நான்கு தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

The National e-learning Portal for General Education

06. அ. பவுல் ஏதென்சில் எப்பெயரினைக்கொண்ட பலிபீடத்தின் ஊடாகத்தனது இறைசெய்தியை வழங்கினார்?

ஆ. பவுலின் மூன்றாவது மறைத்தூதுப் பணியின் போது எபேசில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் மூன்று எழுதுக?

இ. துன்பங்களின் மத்தியில் நீர் துணிவுடன் சான்றுபகர வேண்டி ஏற்படின் நீர் எவ்விதம் செயற்படுவீர் என்பதனை நான்கு கருத்துக்கள் ஊடாக எழுதுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக?

அ. சுகவாழ்வு

ஆ. உண்மைச்செல்வம்

இ. ஆதித்திருசபை

ஈ. கடவுளின் சமாதான யுகம் (10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education